B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி.

கோரிக்கை.	(ரூபாய் ஆயிரத்தில்)
55—சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..	98
56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு ..	5,83,82
57—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ..	35,24
58—பல்வகை மூலதனச் செலவு	2,93,90
மொத்தம்—**B.** வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	**43,79,10**

C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்

59—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.	93,77,62
பெரு மொத்தம்	**11,03,71,52**

4. தீர்மானம்.

பேரவைப் பணியினின்றும் சில உறுப்பினர்கள் தற்காலிக நீக்கம் செய்யப்பெறுதல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையைப் படிக்கத் தொடங்கும்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெயலலிதா பிரிவு) மற்றும் அனைத்திந்திய

1989 மார்ச் 25] [பேராசிரியர் க. அன்பழகன்]

அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்றப் பேரவைக் கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள், முதலமைச்சர் அவர்களிடமிருந்து நிதி நிலை அறிக்கையைப் பிடுங்கவும், பிடுங்கியும், கிழித்தும், அவர்களது மூக்குக் கண்ணாடியை உடைத்தும், வன்முறையில் இறங்கி, அவையை நடத்த முடியாத அளவிற்கு நடந்துகொண்டபடியாலும், பேரவைத் தலைவர் அவர்கள் வேண்டுகோள் விடுத்தும், அதை ஏற்காமல், தொடர்ந்து அப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டதால், இந்தச் செயல்கள் அவையை நடத்துவதற்கு இடையூறு விளைவிப்பதாகவும், அவையின் கண்ணியத்தைக் குறைப்பதாகவும் அமைந்ததாலும், பேரவை எதிர்பார்க்கும் கண்ணியமான முறையின்படி அவர்கள் நடந்து கொள்ளாததாலும், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை வேதனையுடன் முன்மொழிகிறேன்.

''சட்டமன்றப் பேரவை விதி 121, பிரிவு 2-ன் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைப் பேரவைப் பணிகளினின்றும் தற்காலிகமாக 1989ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் முடிய நீக்கம் '' சஸ்பென்சன் '' செய்ய வேண்டும் :

திருவாளர்கள்—

ஆர். அண்ணாநம்பி
கே. அர்ச்சுனன்
ஆ. அறிவழகன்
வி. இராசு
கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்
கே. ஆர். இராசேந்திரன்
எஸ். டி. உகம்சந்த்
சி. கிருஷ்ணன்
வி. பி. சந்திரசேகர்

கே. சின்னசாமி
வே. கு. சின்னசாமி
டாக்டர் ச. சுந்தரராஜ்
வே. நா. சுப்பிரமணியன்
கு. அ. செங்கோட்டையன்
எம். தங்கவேல்
எஸ். திருநாவுக்கரசு
துரை ராமசாமி
கே. பழனிசாமி
எ. பாப்பா சுந்தரம்
வே. பெரியசாமி
செ. பெருமாள்
கொ. மாதப்பன்
பி. மாரப்பன்
ஆர். மூக்கன்
செல்வி ஜெ. ஜெயலலிதா
கே. ஏ. மணி
எஸ். ஆர். இராதா மற்றும்
பேராசிரியர் க. பொன்னுசாமி''

(குறுக்கீடுகள்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் 1989-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் திங்கட் கிழமை காலை 9-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 12-54 மணிக்கு ஒத்தி வைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் :

எதுவுமில்லை.